**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப்பகுதி – 03 - 2018**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப்பகுதி – 03 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 3348 மற்றும் 3349 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின்154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைநிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவராக உள்ளன. கொழும்பு பெரும்பாக பகுதியிலுள்ள நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதிசார் நிலைத்திருக்கும் தன்மையை முன்னேற்றுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 16401.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 112.83 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13083.03 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 90 மில்லியனை நிதியளிப்புச்செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித்தொகையான ரூபா 3318.73 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச்செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 ஆந் திகதியில் ஆரம்பித்ததுடன் 2016 நவம்பர் 3 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதியானது 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிகழ்ச்சித்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

நிகழ்ச்சித்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிகழ்ச்சித்திட்டமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| 1. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு நாணய மிகையானது நடைமுறைஅல்லாசொத்துக்களிற்கு எதிராக பதிவளிக்கப்பட்டிருந்தது | 3.22 | நடைமுறை அல்லாசொத்துக்களின் பெறுமதியானது குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | கருத்துரைக்கப்படவில்லை | நடைமுறை அல்லா சொத்துக்களின் உண்மைப் பெறுமதியானது கணக்கில் கொண்டு வரப்படவேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச்சட்டத்தின் பிரிவு 6 (01) இன் படி | ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட கிரயமுடைய ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதிலிருந்து 60 நாட்களிற்குள் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்ய வேண்டும் மேலும் ஒப்பந்த உடன்படிக்கை பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட வேண்டும் எவ்வாறாயினும் கட்டுமான ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை | ஒப்பந்ததாரரிற்கு எதிராக சட்டம், வரி தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதிருக்கும் | சட்டத் தேவைப்பாட்டுடன் இணங்குவது தொடர்பாக ஒப்பந்ததாரருக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்பது. | ஒப்பந்ததாரர் சட்டத் தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

பெரும்பாக கொழும்பு பகுதியில் உள்ளக நீரின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் மற்றும் கழிவுநீர் குழாய் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துல் நிறுவன மற்றும் செயற்பாட்டு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் அமுல்படுத்துவதற்கு உதவுதல் என்ற 03 கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. தாமதித்து வேலையை ஆரம்பித்தமை நுகர்வுச்சேவைகளின் அனுமதியை பெறுவதற்கு காலதாமதம் ஏற்பட்டமை ஒப்பந்தகாரரின் வினைத்திறனற்ற செயலாற்றல் மற்றும் கொள்ளல் செயன்முறையில் ஏற்பட்ட காலதாமதம் போன்றவற்றால் பௌதீக செயன்முன்னேற்றம் 2018 திசெம்பர் 31 இலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. வெள்ளவத்தையில் கழிவுநீர் சுத்திகப்பு பொறியினை நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் ஒக்டோபரில் வழங்க திட்டமிடப்பட்டிருந்தது எனினும் கொள்ளல் செயன்முறையில் ஏற்பட்ட காலதாமதத்தினால் 2018 திசெம்பர் 31இலும் கூட வழங்கப்பட்டிருக்கவில்லை

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 01. | திறந்த குழாய் பதிப்பு வேலைகள், சாக்கடை வாயில்களை நிறுவுதல் மற்றும் நுண் சுரங்க தண்டு கட்டுமானத்திற்கான உதிரிப்பாகங்களை வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதம் பௌதீக மற்றும் மனித வளங்களின் போதுமற்ற தன்மை போன்றவற்றினால் கிருலப்பொன கழிவுநீர் வலையமைப்பின் மேற்பார்வை வேலைகள் தொடர்ந்தும் வேகமற்றுக்காணப்பட்டது. | திட்டமிட்ட நடவடிக்கைகளை முடிப்பதற்கு காலதாமதம் ஏற்படும். மற்றும் வழங்க எதிர்பார்க்கும் பயன்கள் பாவனையாளர்களை சென்றடைய மாட்டாது | வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு மற்றும் ஒப்பந்தத்தின் செலவு இலக்கை அடைவதற்கு ஒப்பந்தகாரரின் செயற்றிறன் மற்றும் வளப்பங்கீடு என்பன நெருக்கமாக கண்காணிப்பு செய்யப்படுகின்றன. | பொறிகள் மற்றும் வேலையாட்களை அதிகரிப்பதற்கு உடனடி நடவடிக்கைக எடுக்கவேண்டும் |
| 02 | கிருலப்பொன-நாரேகன்பிட்டிய கழிவுநீர் வலையமைப்பின் கட்டுமானத்திற்கான ஒப்பந்தம், பொல்வத்தையிலிருந்து பம்பலப்பிட்டி வரையான கழிவுநீர் பாதை தண்டு மற்றும் பாதிக்கப்பட்ட கழிவுநீர்ப்பாதையை திருத்துதல் மற்றும் தெற்கு நீர்ப்பிடிப்பு பரப்பிலுள்ள தாழ்கொள்ளளவை கொண்ட கழிவுநீர்ப்பாதையின் கொள்ளளவை மேம்படுத்துதலிற்கான ஒப்பந்தம் 2018 திசெம்பரில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது எனினும் யூன்2019வரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | வழங்க எதிர்பார்க்கும் பயன்கள் பாவனையாளர்களை சென்றடைய மாட்டாது | கொள்ளல் நடவடிக்கைகளிற்கு முன்செயற்பாடுகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டன. மற்றும் ஒப்பந்தத்தின் கொள்ளல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. | ஒப்பந்தத்தினை வழங்குவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

### 3.3 சுற்றாடல் தொடர்பான விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சுற்றாடல் அதிகாரி 22 ஒக்டோபர் 2018 இல் செயற்திட்டத்திலிருந்து விலகியுள்ளார்.கடன் ஒப்பந்தத்தின் படி செயற்திட்டத்தின் சுற்றாடல் செயற்திறன் ஒழுங்காக கண்காணிப்புச் செய்யப்பட வேண்டும் அதன்மேலான அறிக்கைகள் | செயற்திட்டத்தின் வேலை தொடர்பான சுற்றாடல் மதிப்பீட்டு ஒழுங்கு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் மேற்பார்வை தொடர்பான தேவைப்பாடுகளை உறுதிசெய்ய தற்காலிக ஏற்பாடுகள் | செயற்திட்டத்தின் வேலைகளானது சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்ததால் இத்தேவைப்பாடானது கட்டாயமானது. |

| | | | |
|---|---|---|---|
| ஆண்டிற்கு இருமுறை கடன் முகவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | | செய்யப்பட்டது. ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | ஆகையால் சுற்றாடல் அதிகாரியினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| **தொழில் நிலைகள்** | **பதவிகளின் எண்ணிக்கை** | | | **விளைவு** | **முகாமைத்துவ கருத்துரை** | **கணக்காய்வாளர் பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|
| | **அனுமதிக்கப்பட்டது** | **2018 திசெம்பர் 31 இல் உண்மையான எண்ணிக்கை** | **வெற்றிடங்கள்** | | | |
| கட்டுமான பொறியியலாளர் | 2 | 1 | 1 | செயற்திட்டத்தின் சீரானவேலைத் தொழிற்பாடுகள்பாதிக்கப்படும். | சந்தையில் காணப்படும் மேம்மடுத்தப்பட்ட சம்பள அளவுகள் காரணமாக தகுதிவாய்ந்த தனிநபர்களை தக்கவைத்தல் கடினமாக உள்ளது. தகுதிவாய்ந்த நபர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் விண்ணப்பங்களை கோருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | பொருத்தமான நபர்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும |
| செயற்திட்ட பொறியியலாளர் | 8 | 2 | 6 | | | |
| செயற்திட்ட உதவி பொறியியலாளர் | 7 | 3 | 4 | | | |